# வட்டுக்கோட்டை மேற்கு வன்னியன் தோட்டம் சின்னக்கதிர்காமம் அருள்மிகு சண்முகப்பெருமான் திருவூஞ்சல்

பண்டிதர் க. மயில்வாகனனார்

வெளியீடு:

சின்னக்கதிர்காமத் தேவஸ்தானம்

வட்டுக்கோட்டை

பிரசோற்பத்தி ௵ வைகாசி ௴ 27௳

## வெளியீட்டுரை

வட்டுக்கோட்டை மேற்கு அருள்மிகு சின்னக்கதிர்காமம் சண்முகப்பெருமான் திருவூஞ்சல் நூலை வெளியிட்டுவைப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்நூல், வட்டுக்கோட்டையூர், பண்டிதர் க. மயில்வாகனனார் அவர்களால் எமது வேண்டுகோளுக்கிணங்க இயற்றப்பட்டது.

ஊஞ்சல், பிரபந்த வகையுள் ஒன்றாகும். பண்டைநாளில் “ஊசல்” என வழங்கப்பட்ட அது மருவி, இந்நாளில் ஊஞ்சல் என அழைக்கப்படுகின்றது. பெரும்பான்மையும் பத்துச் செய்யுள்களை உடைத்தாய் வருதலின், அதனை ஊஞ்சற் பதிகம் என்றுங் கூறுவர். பதிகம் பத்துப்பாடல்களைக் கொண்டது.

ஊஞ்சல், கலிப்பா வாலாயினும் ஆசிரிய விருத்தப்பாவினாலாயினும் பாடப்படுதல் மரபாகும். திருவாசகத்தே மணிவாசகப் பெருமான், கலிப்பாவினால் பொன்னூஞ்சல் பாடியருளினார். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளும் கலிப்பாவினாலே ஊசல் வரி புனைந்தார். பெரும்பாலும் இந்நாளில் ஆசிரிய விருத்தத்தாலே ஊஞ்சல் பாடப்படுகிறது. லாலி பராக்கு எச்சரிக்கை மங்களம் முதலியனவும் சேர்க்கப்படுகின்றன. முருகன் அடியார்கள், இத் திருவூஞ்சலைப் பத்தி சிரத்தையுடன் ஓதிப் பயன் பெறும் பொருட்டுத் தீர்த்தத் திருவிழா நாளாகிய இன்று வெளியிட்டு வைக்கின்றோம். அன்பர்கள் பெற்றுப் பயன் துய்ப்பார்களாக.

பிரசோற்பத்தி 13௳
27-05-1991.
சின்னக்கதிர்காமம்
தேவஸ்தானத்தார்

## காப்பு

சீராருஞ் சோலைசெறி வட்டு ரின்கண்
சிறந்துயரும் வன்னியனார் தோட்டந் தன்னில்
ஏராருஞ் சுரர்மாதுங் குறவர் மாதும்

இருபுடையும் உவந்தருளக் கோயில் கொண்ட
தாராருஞ் சின்னக்கதிர் காம வேலோன்
தாண்மலரில் ஊஞ்சலிசை சாத்தி ஏத்தக்
காராரும் ஐந்துகர நால்வாய் முக்கண்
கணபதியின் இருபாதங் காப்பதாமே.

நூல்

உலகுபுகழ் நால்வேதத் தம்பம் மீதில்
 உற்றசிவா கமமென்னும் விட்டம் பூட்டிக்
குலவுமன்பும் அருளுமெனுந் தொடர்கள் வகீகிக்
 குழைந்துருகும் இதயமதைப் பலகை பண்ணி
இலகுதிரு வூஞ்சலியாம் இயற்றி வைத்தேம்
 இனியவட்டூர் வன்னியனார் தோட்டந்தன்னில்
நிலவுசின்னக் கதிர்காமக் கந்த வேளே
 நேரிழையார் இருவரொடும் ஆடீரூஞ்சல்

நீற்றினொடு கண்டிகையும் மறவா நேயன்
 நிறைகுணத்தோன் அநுபூதி கைவந் துள்ளோன்
ஆற்றன்மலி வெற்றிவேல் அண்ணல் முன்னாள்
 அமைத்ததளி இருந்தருளை வழங்குந் தேவே!
வேற்படையாய் வினைவேரை அகற்றும் வரீா
 விளங்குவட்டூர் வன்னியனார் தோட்டம் மேயாய்
சாற்றுசின்னக் கதிர்காமச் சுப்ர மண்யா!
 தாயர்மார் இருவரொடும் ஆடீரூஞ்சல்

கரங்கூப்பிப் பூதர்குழாம் கானம் பாடக்
 கந்தருவர் யாழினிசை மீட்டி மேவ
உரங்கூட்டும் மருத்துநின்று கவரி வசீ
 உயர்வாகு உடைவாளும் ஏந்தி நிற்பச்
சிரந்தாழ்த்தி வாசவன்மால் அயனும் வேண்டத்
 தேவிமார் இருவரொடும் வறீ்றி ருந்தீர்!
வரமலியும் வட்டுர்வன் னியனார் தோட்டம்
 வளர்சின்னக் கதிர்காம! ஆடீரூஞ்சல்

அருணிலவை முகந்தள்ளி வசீ மொன்றே
 அழுமடியர் வேண்டுவன நல்கு மொன்றே
மருளகற்றி மெய்ப்பொருளை வழங்கு மொன்றே
 மாண்புமலி வேள்வியெலாம் காக்கு மொன்றே
பெருமாய அவுணர்க்கும் அருளு மொன்றே
 பேதைவள்ளி யுடனாடல் புரியு மொன்றே
திருவதன மாறுடைவன் னியனார் தோட்டச்

சின்னக் கதிர்காம! ஆடீ ரூஞ்சல்

அமலனுதல் விழிவந்தீர் ஆடீரூஞ்சல்
ஆரன்மகள் முலையுண்டீர் ஆடீ ரூஞ்சல்
கமலனைமுன் சிறையிட்டீர் ஆடீ ரூஞ்சல்
கருதுவிண்ணோர் சிறைதடிந்தீர் ஆடீ ரூஞ்சல்
நிமலைதரு வேலுடையீர் ஆடீ ரூஞ்சல்
நீடுவட்டூர் மிளிரும்வன் னியனார் தோட்டம்
அமைதரு சின்னக்கதிர் காமத் துள்ளீர்
அணியிழையார் இருவரொடும் ஆடீ ரூஞ்சல்

பண்டுபயில் தவமதனாற் சூரபன்மன்
பவமகன்றான் தற்போதம் நீங்கி நின்றான்
அண்டமெலாங் குமரனருட் கோல மென்றான்
அயன்மாற்கும் எட்டாத மூர்த்தி யென்றான்
தொண்ட ரெலாங் குறையிரப்பார் அருள்வீர் சாமி!
தூயவட்டூர் மேவு வன்னியனார் தோட்டம்
பண்டுசின்னக் கதிர்காமம் வாழும் எந்தாய்!
மங்கைமார் இருவரொடும் ஆடீ ரூஞ்சல்

ஆறங்கம் வேதமுணர் அரிய நாவர்
ஆற்றுமரும் பூசையினும் விழுமி தென்றே
மீறுமன்பிற் கண்ணப்ப தேவர் பூசை
வேலவரே கொண்டனரால் நுந்தை முன்னாள்
நீறணிந்தே ஐந்தடக்கி வாயுங் கட்டி
நிகழ்த்துவழி பாடதனிற் கட்டுண் டீர்நீர்
தேறுவட்டூர் வன்னியனார் தோட்டச் சின்னக்
கதிர்காம! அன்னையரோ டாடீரூஞ்சல்

ஆறுதிரு முடிநிரையும் ஆட ஆட
அழகொளிருங் குண்டலங்கள் ஆட ஆட
வீறுதரு வேற்படையுங் கொடியு மாட
விளங்கிடுசீர்த் திருப்பாதத் தண்டை யாடப்
பேறுபெறு மயூரமொடு குடையு மாடப்
பேசுபுகழ் வன்னியனார் தோட்டம் வாழ்வீர்
கூறுசின்னக் கதிர்காம வட்டூர்க் கந்தா
கோதைமார் இருவரொடும் ஆடீ ரூஞ்சல்

திருவருளாம் நிலவுவிரி கோயில் முற்றும்
திரண்டுநின்றார் தொழும்பர்புன் முறுவல் காண்பான்
குருபரனே சரவணனே குமரா என்றே
கூறுமொலி வான்முகட்டை அணவுதையா

மருமலியும் நீபனேவன் னியனார் தோட்டம்
வருசின்னக் கதிர்காம! வட்டூர் வாசா!
வருமுருகா சண்முகனே மஞ்ஞை யூர்தி
வள்ளிதெய்வ யானையுடன் ஆடீ ரூஞ்சல்

வளங்குலவு பருதிநிரை மகுடம் மானும்
வளர்மதியில் நின்கருணைக் குளிர்மை தோன்றும்
தளங்குசுனை நீலமலர் கடைக்கண் காட்டும்
தடவரைகள் திருத்தோளின் தகைமை சொல்லும்
இளங்குதலைப் பாலரிடம் வதனங் காண்போம்
இலங்குபதம் பதுமம்;வன் னியனார் தோட்டம்
விளங்குசின்னக் கதிர்காம! வட்டூர் வேலா
வித்தகரே தாயரொடும் ஆடீ ரூஞ்சல்

வாழி

மன்னு மறை அந்தணரும் ஆவும் வாழி
மழையினொடு சிவ நெறியும் வேந்தும் வாழி
நன்மை தரு தமிழ் வாழி உயிர்கள் வாழி
நலனேங்கு சேவலொடு மயிலும் வாழி
மின்னலிடை வள்ளி தெய்வ யானை வாழி
வேலினொடு சண்முகனார் திருத்தாள் வாழி
வன்னமுறு வட்டூர் வன் னியனார் தோட்டம்
வருசின்னக் கதிர்காமம் வாழி வாழி.

லாலி

லாலி ஜெய லாலி
லாலி ஜெய லாலி

சிற்பரனார் நுதல் விழியில் வந்தருளும் தேவா
திசைமுகனுக் குபதேசம் செய்த குரு நாதா
அற்புதங்கள் பல மலிந்த கந்த கிரி வாசா
அரிய மகம் வருமேடம் அடக்கு திறல் வரீா
லாலி..........

தெய்வ மகள் குஞ்சரியார் தேடி மகிழ் மார்பா
திருமறையின் உட்பொருளாய் நண்ணுசிவ பாலா
வெவ்வசுரர் வினைகெடுத்த வெற்றி வேல் முருகா

விண்ணவர்கள் துயர் துடைத்த வள்ளி மணவாளா
லாலி............

அட்ட திக்கும் நினது புகழ் வசீது பார் ஐயா
அடியவர்கள் அருளமுதை மாந்துகிறார் துய்யா
வட்டு நகர் வன்னியனார் தோட்டமுறை வேலா
வளர் சின்னக் கதிர்காம நாயகனே குமரா
லாலி...........

பராக்கு

பேரார் சரவண மீதினில் உதித்தாய் பராக்கு
பிறங்கும் மலர்ப்பாயல் மிசைத் தவழ்ந்தாய் பராக்கு
பேரார் சரவண...........

ஏரார்தரும் அறுவர் முலை உண்டாய் பராக்கு
இறைவி தரு வடிவேலுடை ஈசா பராக்கு
சீரார் தரு நீபம்புனை சேயே பராக்கு
சிவனார்க்கன்று உபதேசமே செய்தாய் பராக்கு
பேரார் சரவண............

வானார்சுரர் மாதர் மகிழ் மார்பா பராக்கு
வள்ளிதனை வதுவைபுரி வரதா பராக்கு
காரார் பொழில் சின்னக் கதிர்காமா பராக்கு
கவினார்தரு வட்டூரமர் கந்தா பராக்கு
பேரார் சரவண...........

எச்சரீக்கை

கொடிதாகிய அவுணரிருட் பகையே எச்சரீக்கை
குன்றவில்லி அன்று தருங் குருவே எச்சரீக்கை
கொடிதாகிய.............

மிடியாங்கிரி பொடியாக வேல் விடுவாய் எச்சரீக்கை
மேவும் வினை சுட நொந்தனம் விகிர்தா எச்சரீக்கை
அடியார் துயர் நொடி மீதினில் தடிவாய் எச்சரீக்கை
ஆடும் மயில் மீதில் நடம் இடுவாய் எச்சரீக்கை
கொடிதாகிய...........

கொடிபோலிடை இருவோர் பயில் குழகா எச்சரீக்கை

குன்றம் தொறும் நின்றாடிடும் குமரா எச்சரீக்கை
படியில் உயர் வட்டூர்ப் பழம் பதியாய் எச்சரீக்கை
பரவு சின்னக் கதிர்காமப் பரமே எச்சரீக்கை
கொடிதாகிய.........

மங்களம்

மங்களம் மங்களம்
மங்களம் மங்களம்

கங்கை யணி வேணிபுனை ஐங்கரர்க்கு மங்களம்
கௌரியொடு கண்ணுதற் கடவுளுக்கு மங்களம்
துங்கமுறு வள்ளி தெய்வ யானைக்கு மங்களம்
தோகை மயில் மீது வரு சண்முகற்கு மங்களம்
தங்கு சிவ ஞான வடிவேல் தனக்கு மங்களம்
தாவிவரு சேவலொடு மயிலுக்கு மங்களம்
பொங்கு திறல் வரீவாகு தேவருக்கு மங்களம்
போற்று ஞான வைரவ சுவாமிக்கு மங்களம்
எங்குமுள திருமுருகன் அடியருக்கு மங்களம்
இலங்கு சின்னக் கதிர்காம வட்டூர்க்கு மங்களம்.